"கர்த்தர் நகரைக் காக்காவிட்டால்
அதைக் காக்கிறவன் கண்விழிப்பது விருத்தம்" தாபிதம்: 1876

சத்திய வேத

பாதுகாவலன்

தந்தி: "கதலிக்பிறஸ்" யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 300
REGISTERED AT THE CEYLON G.P.O. AS A NEWSPAPER

89-ம் புத். || யாழ்ப்பாணம், 1964-ம் ஆண்டு புரட்டாதிமீ 26-ந்திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 || 38-ம் இல.

# வத். பொதுச்சங்க 3வது கட்டம் கூட்டுப்பூசையோடு ஆரம்பமானது

## 2,513 சபைப்பிதாக்கள் சமுகமளித்தனர்

## தந்தையின் 45 நிமிட உரைநிகழ்ச்சி

6-ம் சின்னப்ப பாப்பரசர் தமது கருதினல்மார் மூவருடனும் மறுமேற்றிராணிமார் 21 பேருடனும் ஒன்றுசேர்ந்து ஒப்புக்கொடுத்த மனக்கவர்ச்சிக்குரிய அழகிய ஆடம்பர கூட்டுப் பூசைத்திருச்சடங்குடன் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் 3-ம் கட்டம் சம்பேதுருவின் மகாதேவாலயத்தில் இம்மாதம் 14-ம் திகதி உலகின் எல்லாக்கோணங்களிலுமிருந்து குழுமியிருந்த 2,513 மேற்றிராணிமார் 23 மறு கிறிஸ்தவசபைகளின் அவதானிகள் மற்றும் பலரது சமுகத்தில் ஆரம்பமாயிற்று.



திவ்வியபூசைப்பலி முடிந்ததும் பரிசுத்ததந்தை இலத்தீன்மொழியில் 45 நிமிடம் ஆழ்ந்த மனப்பான்மையுடனும்புன்னகையற்ற வதனத்துடனும் உரைநிகழ்த்தினர். தமது உரையில் மேற்றிராணிமாரின் உரிமைகளையிட்டும் அவர்கள் தம்முடன் ஒருமித்து அனுபவிக்கும் கூட்டதிகாரத்தின் தன்மையையிட்டும் விசேஷமாகக்குறிப்பிட்டார்.

அங்கு சமுகமாயிருந்த பிற கிறிஸ்தவ அவதானிகளை அன்புடன் வரவேற்றுத் தமது நன்றியை அவர்களுக்குத் தெரிவித்தார். மேலும் இம்மாதம் குறிக்கப்பட்ட தினங்களைச் சங்கத்தின் சித்திக்காக விசேஷ செபதப தினங்களாக அனுசரிக்கும்படி பரி தந்தை கேட்டுக்கொண்டார்.

இக்கட்டத்துடன் சங்கம்முடிவு பெறக்கூடிய முறையில் ஆயத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன வென்றும், முடியாவிடில் மேலும் ஒரு கட்டத்துடன் சங்கம் முடிவடையுமென்றும் நம்பப்படுகிறது.

### சங்கத்தில் இல்லறத்தவர்

கனடாதேச குவெபெக்பிரிவு அதிமேற்றிராணியார் வத்திக்கான் சங்கத்தில் தமது வேத கரும ஆலோசகராகத் திருவாளர் சாள்ஸ் டி கொனிங் என்பவரை நியமித்து அங்கு அவரைத் தம்முடன் கூட்டிச்சென்றிருக்கின்ருர். அந்நாட்டு லாவால் சர்வகலாசாலையில் பெயர்பெற்ற தத்துவசாஸ்திரியாக [illegible]

ஞானோபதேச நடுநிலையம்
மேற்றிராசன இல்லம், யாழ்ப்பாணம்.

ஞானோபதேச கருத்தரங்கு

● யாழ்ப்பாணம்
நிகழிடம்: சம்பத்திரிசியார் கல்லூரி
நாள்: 26-9-64 சனிக்கிழமை
காலம்: காலை 8-45 மணி

* * *

● இளவாலை
நிகழிடம்: ஹென்றியரசர் கல்லூரி
நாள்: 10-10-64 சனிக்கிழமை
காலம்: காலை 8-45 மணி

கருத்தரங்கில், சிறப்பாகச் சில்லாலை, மாதகல், பெரியவிளான், இளவாலை, சேந்தாங்குளம், ஊறணி, மயிலிட்டி பாடசாலை ஆசிரிய ஆசிரியைகளும், கத்தோலிக்க சேவையாளர்களும் சமுகமளிப்பார்களென எதிர்பார்க்கின்ருேம்.

குறிப்பு; i மதியபோசனத்துக்கான ஆயத்தங்கள் ஒழுங்குசெய்யப்படும்.

ii கருத்தரங்கில் கலந்துகொள்பவர்கள் நேரகாலத்துடன் ஞானோபதேச நடுநிலையத்துக்கு அறிவிக்கவும்.

iii வரும்போது தம்முடன் குறிப்புப் புத்தகம், எழுதுகருவிகள் கொணருதல் உசிதமாகும்.

* * *

தோழன் வருடசந்தா ரூபா 4—00
தனிப்பிரதி சதம் 30
(தபாற்செலவு பிரத்தியேகம்)

நிர்வாகி

# பாப்பரசர் இந்தியாவுக்கு வருவாரா?

அண்மையில் ரோமாபுரியில் உலவிய வதந்திகளில், பாப்பரசர் இவ்வருடம் மார்கழிமாசம் முதற்பகுதியில் இந்தியாவுக்குச் செல்வார் என்னும் வதந்தி முக்கிய இடம்பெற்றது. இந்திய அரசாங்கம் பாப்பரசருக்கு வரவழைப்பு அனுப்பியிருக்கிறதென்றும், பாப்பரசர் அதை ஏற்றுக்கொண்டு டிசெம்பர்மாதம்2-ம்தேதி இந்தியா சென்று ராஷ்டிரபதி ராதாகிருஷ்ணன் அவர்களால் வரவேற்கப் படுவாரென்றும், பின் பம்பாயில் நடைபெறவிருக்கும் சற்பிரசாத மகாநாட்டுக்குச் செல்வாரென்றும் அவ்வதந்திகள் கூறுகின்றன. பாப்பரசரின் காரியாலய உயர் உத்தியோகஸ்தர் ஒருவர் இதுசம்பந்தமாக இந்தியாசென்றிருக்கின்ருர் என்று உலாவிய வதந்தியை வத்திக்கான் வட்டாரம் மறுத்திருக்கின்றது. இந்திய ராஷ்டிரபதி மகாநாட்டின் ஆரம்ப தினத்தில் அங்கு சமுகம் அளிப்பது சாத்தியம் என கருதினல் கிருசியாஸ் அவர்கள் கூறியிருக்கின்ருர்.

### சர்வதேச சற்பிரசாத மகாநாடு ஏன்?

(1) சற்பிரசாதத்தில் தேவஞகிய யேசுக்கிறிஸ்துநாதர் உலகில் என்றென்றும் இருக்கின்ருர் என்பதை வெளிப்படுத்த.

(2) அன்பே உருவாகிய சற்பிரசாத தேவனை மகிமைப்படுத்த.

(3) தேவனுக்குச் செய்யும் பராமுகம், நிந்தை, அவமானம் ஆகியவற்றுக்கு அன்புள்ள அவரது மக்கள் பரிகாரம் செய்ய.

(4) சமயசம்பந்தமான உலக பிரச்சினைகளை அறிவாளிகளுடன் ஆராய்ந்து நிவாரணம் செய்ய.

(5) உலகமக்கள் யாவரும் சகோதரர் என்பதையும் தேவனே எல்லோருக்கும் பிதா என்பதையும் எடுத்துக்காட்ட.

### சமாதானம் அவசியம் வேண்டும்

ஒருவாரத்திலே இரண்டாம் முறையாக 6-வதுசின்னப்ப பாப்பரசர் சமாதானத்தின் அவசியத்தை வற்புறுத்தியிருக்கின்ருர். "உலகத்துக்கும், நாகரிகத்துக்கும், திருச்சபைக்கும் சமாதானம் இன்றியமையாதது. அதற்காக யாவரும் என்றும் மன்ருடிவாருங்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

### பம்பாய் சற்பிரசாத மாநாடு ஒரு புதிய சகாப்தத்தின் முன்னேடி

வருகிற கார்த்திகைமாதம் பம்பாய்நகரில் நடக்கஇருக்கும் சர்வதேச சற்பிரசாத மகாநாட்டைப் பற்றிப் பரிசுத்தபாப்பரசர் குறிப்பிடுகையில், " அது ஒருமாபெரும் சம்பவம் "என்றும் " அது நடக்கப்போகின்ற இடமும் நேரமும் அதன் முக்கியத்துவத்தைப் பன்முறை பெருக்கிவைக்கின்ற சாதனங்கள் "என்றும் கூறியிருக்கின்ருர். மேலும், அவர் இதுபற்றித் தமது கர்தினல் சபையினருக்கு நிகழ்த்திய உரையில், " இம்மகாநாடானது முழுத் திருச்சபைக்

(தொடர்ச்சி 6-ம்பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### புரட்டாதி மாதம் — 1964.

| | | | |
|---|---|---|---|
| 27 | ஞா. | பெந்தக்கோஸ்திவுக்குப் பின்வரும் 19-ம் ஞாயிறு | [ப] |
| 28 | தி. | அர்ச். வென்செஸ்லாஸ் | [சி] |
| 29 | செ. | அதிதூதரான அர்ச். மிக்கேல் | [வெ] |
| 30 | பு. | அர்ச். ஜெரோம் | [வெ] |

### ஐப்பசி மாதம்—1964.

| | | | |
|---|---|---|---|
| 1 | வி. | காலதினம் | [ப] |
| 2 | வெ. | காவற் சம்மனசுகள் திருநாள் | [வெ] |
| 3 | ச. | அர்ச். சின்னத் தெரேசம்மாள் | [வெ] |


# சத்தியவேத பாதுகாவலன்

1964-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 19-ந் திகதி


## வத்திக்கான் பொதுச்சங்கம்

இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் மூன்ருவது கட்டம் இம்மாதம் 14-ம் திகதி ஆரம்பமாகி இப்போது நடைபெற்று வருகிறது. இக்கட்டம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததென்றும், இதன் காரியசித்திக்காகக் கிறிஸ்தவர்கள் எல்லோரும் முன்னிலும்பார்க்கக் கூடியமுறையில் செபதபங்கள் செய்யவேண்டுமென்றும் எங்கள் பரிசுத்ததந்தை அண்மையில் திரும்பத்திரும்பத் தமது ஞானமக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிருர்.

சங்கம் ஆரம்பிக்கச் சிலநாட்களுக்குமுன்னே பாப்பரசர் அகில கத்தோலிக்க உலகத்துக்கு கருதினல் திசெறன்ற் மூலமாக விடுத்த ஒரு விசேஷ நிருபத்தில் பொதுச்சங்கத்துக்காகச் செபித்தலின் அத்தியாவசியத்தைக் கிறிஸ்தவர்கள் அனைவரும் உணரவேண்டுமென்றும், சங்கத்திலே ஆராயப்படும் அலுவல்களில் எல்லோரும் கூடிய அக்கறை காண்பித்தலைத் தான் மிகவும் விரும்புவதாகவும் அழுத்தமாக எடுத்துக காட்டியிருக்கிருர்.

எங்கள் அன்புத்தந்தையின் விசேஷவேண்டுகோளுக்குக் காரணம் உண்டு. இரண்டு வருடங்களுக்கு முன்னே பொதுச்சங்கம் முதன்முதலாகக் கூடியபோது கிறிஸ்தவர்கள் காண்பித்த சிரத்தையும் சங்கத்துக்காகச் செபதபங்கள் செய்வதில் இருந்த ஊக்கமும் படிப்படியாகக் குறைந்துகொண்டே வந்திருக்கின்றது.

நாம் எல்லோரும் கிறிஸ்துநாதரைத் தெளிவாக விளங்கிக் கொள்ளும்படியாகவும் அவரை மென்மேலும் கூடியமுறையில் நேசிக்கும்பொருட்டும் திருச்சபையைப் புதுப்பித்து அதற்குப் புத்துயிர் கொடுப்பதே பொதுச்சங்கத்தின் நோக்கமென்பதை நாமெல்லோரும் அறிவோம். சங்கத்திற் கலந்துகொள்ள ரோமாபுரிக்குப் புறப்படமுன் எங்கள் மேற்றிராணியார் விடுத்த நிருபத்திலுள்ள சில வார்த்தைகளை இந்த நாட்களிலே விசேஷவிதமாக ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுவோம்:

"மாறிவரும் காலங்களுக்குத் தக்கதாக யேசுநாதரைச் சரியாகவும் கூடியமுறையிலும் அறியப்பண்ண வேண்டிய அவசியம் தோற்றுமாயின், அவரின் வேலைகளுக்குத் தேவையான உகந்த புதுமுறைகளை நாம் கண்டுபிடிக்கவேண்டும். இவைகள் எல்லாவற்றிற்கும் தேவனுடனேயே சுபாவத்துக்குமேலான தொடர்பு நமக்கு ஏற்படுவது அவசியமாயிருப்பதால், மனித அறிவுக்கும் தைரியத்திற்கும் மேற்பட்ட ஆற்றல் நமக்குத் தேவைப்படுகின்றது........ உங்கள் செபதபங்களினுல் ஏற்படும் ஏராளமான தேவ வரப்பிரசாதங்கள் சங்க ஆலோசனைகளில் சங்கப்பிதாக்களுக்கு வேண்டிய தெளிவான விசேஷ ஞானத்தைத் தேவனிடமிருந்து பெற்றுக்கொள்ள உதவும்படியாக இடைவிடாது செபிக்கும்படியும், உதாரமனமுடைய பரித்தியாகங்கள் புரியும்படியும் உங்களை வேண்டுகின்ருேம்."

சங்கத்தை வழிநடத்துகிறவர் திவ்விய இஸ்பிரீத்துசாந்து சருவேசுரன். அவரின் கொடைகளைக் கூடியிருக்கும் சங்கப்பிதாக்களின்மேல் பொழிந்தருளும்படி சோர்வுருது இடைவிடாது மன்ருடுவோம். எங்களால் கூடியளவு ஒறுத்தல் பரித்தியாகங்கள் செய்வோம். எங்கள் பரிசுத்த தந்தையின் விருப்பின்படி இம்மாதம் 27-ந் திகதி ஞாயிற்றுக்கிழமையை சங்கத்துக்காக ஒரு விசேஷ செபதப நாளாக அனுசரிப்போம்.

இரண்டு புள்ளிகளினுல் ஒருகோடு அமைகிறது. வாழ்வின் போக்கும் இரு புள்ளிகளினுல் நிர்ணயிக்கப்படுகிறது. நாம் இருக்குமிடம் முதற் புள்ளி. நாம் போய்ச்சேரவேண்டிய இடம் இரண்டாவது புள்ளி. இவ்விருபுள்ளிகளையும் நிர்ணயித்துக்கொள்வதே வாழ்வின் திசையைத் தீர்மானித்தலாகும். இத்திசைக் கண்நில்லாது அங்குமிங்கும் அலைந்து திரிவதனுல் நம்வழி உறுதியாவதில்லை.

*அறிவித்தல்*

## அனைத்துலக சற்பிரசாத மாநாடு

சமீபத்தில் நம் மேற்றிராணியாண்டவர் விடுத்த நிருபத்தில் பம்பாய் சற்பிரசாத மாநாட்டைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தது ஞாபகத்திலிருக்கலாம். அதனை மீண்டும் உங்கள் நினைவிற்குக் கொண்டு வருகின்ருேம்.

**"வசதிக்குத்தக்கபடி, குருமார் பிள்ளைகளை விசேஷ பக்தி ஆராதனைகளில், பிரதானமாக திவ்விய பூசையிற் பங்குபற்றுவதிலும், திருவிருந்து அருந்துவதிலும், ஒன்றுகூடி ஈடுபெறச் செய்து, பம்பாயில் நடைபெறவிருக்கும் சற்பிரசாத மாநாட்டின் நோக்கங்களுக்காக ஐப்பசி 1-ந் திகதி தொடக்கம் 31-ந் திகதி வரைக்கும் ஒரு விசேஷ ஞானப்பூச்செண்டு தயாரிப்பார்களாக."**

இவ்விசேஷ ஞானப்பூச்செண்டைப் பற்றிய விபரங்கள் அடுத்த வாரக் காவலனில் பிரசுரிக்கப்படும்.

24-9-64

யாழ் / மேற்றிராசன பரிபாலனர்,
மேற்றிராணியார் இல்லம்,
யாழ்ப்பாணம்.



## இது புதிதன்று

நற்கருணை கொடுக்குமுன்பு குரு, "கிறிஸ்துவின்சரீரம்" என்று சொல்லுவதும், நற்கருணையை அருந்துபவர் "ஆமென்" என்று கூறுவதுமான நற்கருணை உரையாடல் இன்று நேற்று ஆரம்பமானதல்ல. இது நான்காம் நூற்ருண்டிலேயே பழக்கத்தில் இருந்திருக்கிறது.

"நற்கருணை உட்கொள்ளுமுன் நீங்கள் சொல்லும் 'ஆமென்' என்ற வார்த்தைக்கு அர்த்தமில்லாமலில்லை. கிறிஸ்துவைத் தேடும் உங்கள் முன்நின்று 'இதோ' கிறிஸ்துவின் சரீரம்' என்று சொல்லி குரு நற்கருணை கொடுக்கிருர். அதை உட்கொள்ளும் நீங்கள் 'ஆமென்' என்று அந்த உண்மையை ஆமோதித்து உட்கொள்ளுகிறீர்கள்" என்று அர்ச். அம்புரோசு கூறுகிருர்.

இஸ்பிரீத்துசாந்து திருநாளன்று புதிதாக ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கு அர்ச். அகுஸ்தீனுர்: "கிறிஸ்துவின் சரீரம்" என்று குரு சொல்லும் வார்த்தைகளுக்கு 'ஆமென்' என்று நீங்கள் பதிலளிக்கிறீர்கள். நீங்கள் கூறும் 'ஆமென்' என்ற வார்த்தை உண்மையாக இருக்கவேண்டுமானுல் உங்கள் ஒ்வ்வொரு செயலிலும் நீங்கள் கிறிஸ்துவின் சரீரத்தின் உறுப்புகளாயிருங்கள்" என்கிருர்.

இந்த நற்கருணை உரையாடல் 11-ம் நூற்ருண்டுவரை பழக்கத்தில் இருந்து வந்திருக்கிறது. இன்றும் அம்புரோசியாரின் திருவழிபாட்டு முறையில் இந்தப் பழக்கம் இருந்துவருகிறது.

இதுவரை நமக்குப் பழக்கத்தில் இருந்துவரும் விதிமுறை மத்திய காலத்தில் வளர்ச்சி அடைந்து 1604-இல்தான் 5-ஆவது பத்திநாதரின் பூசைப்புத்தகத்தில் சேர்க்கப்பட்டது.

என்ருலும் 1950-ம் ஆண்டிலேயே திருவழிபாட்டு வல்லுநர்கள் "நற்கருணையை உட்கொள்வோரது எண்ணிக்கை பெருகுவதால் பழைய விதிமுறைக்குத் திரும்பவேண்டிய அவசியத்தை உணர்ந்தார்கள். ஏனென்ருல் இந்த நீண்ட விதிமுறையைத் திரும்பத் திரும்பச் சொல்லுவது குருக்களுக்குச் செபமாக இருக்காமல் பொறுமையைச் சோதிக்கும் பெரும் சுமையாகவே இருக்கிறது. மேலும் இன்றைய திருவழிபாட்டு முறைகளில் ஏற்பட்டிருக்கும் மறுமலர்ச்சி விசுவாசிகளை அதிகமதிகமாகத் திருவழிபாட்டில் பங்கு பற்றச்செய்வது மாறுதலுக்கு மற்றுமொரு காரணமாகவும் விளங்குகிறது.

ஆகவே, இப்பொழுது புதிதாக நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் நற்கருணை உரையாடல் நமக்குக் கீழ்க்காணும் பொருள்களை உணர்த்த வேண்டும்.

1. "இதோ நான் கையிலேந்தி உமக்கு அளிக்கப்போவது கிறிஸ்துவின் சரீரம்" என்பதுதான் குரு கூறும் 'கிறிஸ்துவின் சரீரம்' என்ற வார்த்தைகளில் பொதிந்திருக்கும் பொருள்.

2. "இது மெய்யாகவே கிறிஸ்துவின் சரீரம் என்பதை நான் விசுவசிக்கிறேன்" என்பதுதான் நற்கருணை உட்கொள்ளுபவர் கூறும் 'ஆமென்' என்ற வார்த்தையில் புலப்படும் பொருள்.

கத். சேவை.

## தனியார் பள்ளிக்கூடங்கள் ஜனநாயகத்தின் சின்னங்கள்


— பிறதர் ஒட்டுல்

"உங்கள் நாட்டில் தனியார் பள்ளிக்கூடங்கள் இருப்பது இந்நாட்டில் ஜனநாயகம் இன்னும் இருக்கின்றது என்பதைக் காட்டுகின்றது. மனிதஉரிமைகளுக்கு மதிப்பில்லாத இடங்களில் இப்படியான பள்ளிக்கூடங்கள் காணக் கிடையா.

"சனங்களின்நன்மைக்காகஸ்தாபனங்கள் இருக்கவேண்டுமேயல்லாது ஸ்தாபனங்களின் நன்மைக்காகச் சனங்கள் இருப்பதில்லை என்னும் உண்மையை நாம்விளங்கிக்கொள்ள வேண்டும். நாட்டில் உள்ள சகலபிள்ளைகளும் நல்ல கல்விபயின்றுகொள்ள வசதி அளிப்பது அரசாங்கத்தின் கடமை. ஆனுல், எத்தகைய கல்வி நமதுபிள்ளைகள் பெறவேண்டும் என முடிவுசெய்யும் சுயாதீனம் பெற்ருேருக்கு இருக்கவேண்டும்.

[ தொடர்ச்சி 6-ம் பக்கம் ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அன்பார்ந்த தம்பி, தங்கையர்களே உங்களுக்கு என் அன்புகனிந்த வணக்கம்!**

எப்பொழுதும் ஓடிக்கொண்டிருக்கும் நீர் பளிங்குபோலத் தெளிவாயும், சுத்தமாயும் இருக்கும். ஆனால், கட்டுப்பட்டநீர் அழுகிப் பழுதுற்று குப்பை கூழங்களினால் நிறைந்துபோயிருக்கும். சோம்பேறி கட்டுப்பட்ட நீருக்குச் சமானமாவான். அவனுடைய கண்கள் அபாயத்துக்குரிய விஷயங்களை நோக்கியபடியிருக்கும். அவனுடையமனது கெட்டஎண்ணங்களினால் நிரம்பிப்போயிருக்கும், அவனுடைய இருதயம் காமாதுர இச்சைகளால் நிறைந்திருக்கும். சோம்பல் எவ்வகையான அக்கிரமங்களுக்கும் தாய். அதுஆத்துமத்தில் பிசாசுபடுத்துறங்கும் தலையணையாகும். எப்போதும் அலுவலாயிருப்பவனை ஒருபிசாசு சோதனைசெய்யுமிடத்து, சோம்பேறியைப் பத்துப் பிசாசுகள் அரிகண்டப் படுத்திக்கொண்டிருக்கும். சோம்பலுக்கு இடங் கொடேல்:

—அண்ணா.

## அன்னையின் அன்பளிப்பு 1 போட்டி முடிவு விபரம்

அன்னையின் அன்பளிப்புக்குவந்த மொத்தக் கூப்பன்களின் தொகை 284

எல்லாஞ் சரியானவை — தொகை 21

பங்குபற்றிய யாவருக்கும் நன்றி.

திருவுளச் சீட்டுமூலம் தெரிவுசெய்யப் பட்டபின் பரிசுபெறுவோர் விபரம்:

1-ம் பரிசு

செல்வன்: அ. ஞானப்பிரகாசம்,
அர்ச். அந்தோனியார்கோயில்,
மட்டக்களப்பு.

2-ம் பரிசு

செல்வன்: எஸ். பிரான்சிஸ்,
12/11 பெய்லி வீதி, நாவலப்பிட்டிய.

3-ம் பரிசு

செல்வன்: சேவியர் கொரேரா,
அர்ச். கபிரியேல்கல்லூரி,
எட்டியாந்தோட்டை.

பரிசுபெற்றோருக்கு எமது வாழ்த்துக்கள்.

பரிசில்கள் கூடியவிரைவில் அனுப்பிவைக்கப்படும்.

நல்வரவேற்பு நல்கிய நண்பர்களுக்கு நவில்கிறேன் நன்றி.

சரியான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ப | 2 ம் | 3 பா | ய் | ந | 4 க | ர | 5 ம் |
| 6 ரி | பு | ப் | சி | ⊛ | 7 ரு | ணை | க |
| சு | அ | பா | 8 அ | ⊛ | ணை | ⊛ | ர |
| த் | ⊛ | ண | ண் | ⊛ | ⊛ | ⊛ | ந |
| 9 த | ண் | ட | னை | ⊛ | 10 சு | ரை | ⊛ |
| 11 வா | ⊛ | வ | ⊛ | ⊛ | 12 த | ப | 13 சு |
| 14 ர | ச | ர் | 15 அ | ⊛ | ண் | ⊛ | 16 ப |
| ம் | ⊛ | ⊛ | ன் | ⊛ | ⊛ | ⊛ | ம் |

எதிர்பாருங்கள்:

**அன்னையின் அன்பளிப்பு 2**

## கன்னியின் ஆசீர்வாதம்

சாள்ஸ் போர்ட்டர் பெரியதனவந்தன் வியாபாரி. லாஸ் ஆஞ்சலஸ் என்னும் இடத்தில் வசித்தான். ஒருநாள் இரு கன்னியர் அவனைப் பார்க்கவந்திருப்பதாக அவனுடைய காரியதரிசி அறிவித்தான்.

"அவர்களுக்கு என்ன வேண்டுமாம்?"

"அனாதைச் சிறுவர்களுக்காக ஏதோ உதவி கேட்க வந்திருக்கிறார்கள்."

"அவர்களைப் போகச்சொல்லிவிடு. தங்களுடைய மதத்தினரான கத்தோலிக்கரிடம்போய் அவர்கள் உதவி கேட்கட்டும். நான் அவர்களைப் பார்க்கப் போவதில்லை."

காரியதரிசி வெளியே போய்த் திரும்பி வந்தான். "நீங்கள் சொன்ன பதிலைக் கேட்டதும், அவர்களுடைய முகம் மிகவாடியது. அவர்களைப் போகச் சொல்ல என்மனம் துணியவில்லை: ஒரு நிமிஷம் போய்ப் பார்த்துவிட்டு வாருங்களேன்."

"நல்லது, அவர்களை வரவிடு."

கன்னியர் உள் நுழைந்தனர். "உங்களுக்கு என்ன வேண்டும்?" என தனவந்தன் கோபத்துடன் கேட்டான்.

"அனாதைப் பிள்ளைகளுக்கென ஒரு மடம் கட்டி நடத்தி வருகிறோம். இன்று புதிதாகப் பதினொருவர் வந்தனர். அவர்களுக்குப் படுக்கக் கட்டில்கள் இல்லை" என இத்தாலிய பெண்ணான ஒரு கன்னி கூறினாள்.

"என்ன, என்னை பதினொரு கட்டில்கள் வாங்கிக் கொடுக்கச் சொல்கிறீர்களா?"

"இல்லை இல்லை. ஒன்றாவது வாங்கிக் கொடுங்கள். இரும்புக் கட்டில்களின் விலைமலிவு. இந்த உதவிசெய்தால், கடவுள் உங்களை ஆசீர்வதிப்பார்."

அவனுடைய மனம் இளகியது. பதினொரு கட்டில்கள் வாங்கப்பணம் கொடுத்தான். தன்னுடன் பேசிய இத்தாலிய கன்னியின் பேரை பின்னர் விசாரித்து அறிந்தான். பிரான்சிஸ் சேவியர் கப்ரீனி தாயார். இப்பொழுது அர்ச். கப்ரீனி. அவளது மன்றாட்டின் பயனாகத் தான் கத்தோலிக்கசபையிற் சேரும் பாக்கியம் கிடைத்தது என அந்தத் தனவந்தன் கூறுகிறான்.

## முழுக்கழுதை:

கூரேதார்ஸ் என்றழைக்கப்படும் ஜோண் வியான்னி குருப்பட்டம் பெறக்கூடிய அளவு கல்வியறிவுள்ளவரா என பரிசோதிக்கும்படி ஒருவரை மேற்றிராணியார் அனுப்பி வைத்தார். அவருக்கு அநேக காரியங்கள் தெரியாது. "இது முழுக் கழுதை, இதைக்கொண்டு என்ன செய்யமுடியும்?" என பரிசோதகர் கோபத்துடன் கூறினர். ஜோண் வியான்னியோ அமைதியுடன் "கழுதையின் தாடை எலும்பைக் கொண்டு சம்சோன் 3000 பிலிஸ்தியர்களைக் கொன்றார். அப்படியானால் ஒரு முழுக்கழுதையைக்கொண்டு கடவுள் என்னதான் செய்யமுடியாது?" என்றார்.

ஆகம அரங்கம்—1 — சிறு நாடகம்

## "பாவத்தின் கூலி மரணம்"

[ஆதாம், ஏவாள் சருவேசுரன் இட்டகட்டளையைத் தட்டிக்கழித்தனர். சிங்கார வனத்திலிருந்து துரத்தப்பட்டனர். வாளேந்திய வானதூதன் வாயிலைக்காவல் செய்து வந்தான்.] வருடங்கள் பல உருண்டோடின.

ஒருநாள்......

**ஆதாம்:** (கவலையுடன்) பசாசின் பேச்சை நம்பியதாலே இக்கதிவந்தது? (மீண்டும் நிலத்தை உழுகிறான்.)

**ஏவாள்:** (விசனத்துடன்) உண்மையிலே அந்தப்பாம்பு நம்மை ஏமாற்றிவிட்டது.

**ஆதாம்:** நடந்ததை எண்ணிக் கவலைப்பட்டால்அதுமடமை. நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தி உழைக்க வேண்டியதுதான்.

**ஏவாள்:** அது எல்லாம் இருக்கட்டும். பிள்ளைகள் இருவரும் வெளியில் சென்றார்கள். மாலைநேரமாகப்போகிறது. ஒருவேளை காட்டுப்பக்கம் சென்றார்களோ ... ..

(உத்தசத்தமாய் அழைக்கிறாள்) தம்பி! காயீன், ...ஆபேல்...(தேடிப் புறப்படுகிறாள்.)

* * *

(மனது மயங்கும் மாலைவேளை. பொறுமையின் நிமித்தம் காயீன் ஆபேலைக் கொலைசெய்யத் திட்டம் தீட்டுகிறான்.)

**காயீன்:** தம்பி புல்வெளிப்பக்கம் சிறிது உலாவிவிட்டு வருவோமா?

**ஆபேல்:** அண்ணா, அங்கே என் மந்தைகளும் நிற்கின்றன. அவற்றையும் பார்த்துவரலாம். (இருவரும் இன்பமாகப்பேசிக்கொண்டே போகின்றனர்: புல்வெளியில் மந்தைகள் மேய்ந்துகொண்டிருக்கின்றன.) காயீன் ஆபேல்கிட்ட நெருங்குகிறான். இடுப்பிலிருந்து கத்தியை எடுத்து நீட்டுகிறான்.

**காயீன்:** இன்று உன்னை ஒழித்துக்கட்டப்போகிறேன்.

**ஆபேல்:** ஆ! அண்ணா, உனக்கு நான் என்ன தீங்கு செய்தேன்?

**காயீன்:** சத்தம்போடாதே! (கத்தியை ஓங்கிக்குத்துகிறான்)

**ஆபேல்:** ஆ! ஆ! என் அம்மா!!! என் அண்ணா ... (மந்தைகள் அங்குமிங்குமாகக் கலைகின்றன. ஆபேல் உடல் பசும்புல்மேல் சாய்கிறது.)

(கருமத்தை முடித்த காயீன் வீட்டுக்குத்திரும்பினான். அன்னையின் அழைப்பு அவன்காதுகளில் விழுந்தது. அன்னையைக் காண்கிறான்.)

**ஏவாள்:** தம்பி இதுவரையும் எங்கே சென்றிருந்தீர்கள்? ஆபேல் எங்கே?

**காயீன்:** காலையில் கண்டபின் நான் அவனைக் காணவில்லை. என் தம்பிக்கு நான் காவலனா?

**ஏவாள்:** ஏனடா தம்பி, இப்படி அவன்மேல் கோபப்படுகிறாய்? (இப்படிக் கேட்டுவிட்டு) ஆபேல்! தம்பி ஆபேல் என்று அழைத்துக்கொண்டு புல்வெளிப்பக்கம் செல்லுகிறாள். (அவள்கண்டது ... மந்தைகள் நாலாபக்கமும் சிதறிநின்றன. பலவிதபறவைகள் கூட்டமாயிருந்து கத்திக்கொண்டிருந்தன.)

**ஏவாள்:** (ஆபேல்கிட்டச்சென்று) தம்பி! எழுந்திரடா, உனக்குத் தூங்க இடமில்லையா? பசிக்கவில்லையா? எழுந்திரடா என்று உருட்டிப் புரட்டிப்பார்த்தாள். ஆனால், ...... சாவு என்பது என்னவென்று அவளுக்குத் தெரியுமா? (ஏவாளைக் காணாது ஆதாமும் அவ்விடம் வருகிறான்.)

**ஆதாம்:** அடதம்பி, இன்னுமா தூங்குகிறாய்; எழுந்திரடா ......

(ஒருநாள் இரண்டுநாள் ...... ஓடி மறைந்தது. ஆபேல் உடலில்இருந்து துர்நாற்றம் வீசியது.)

**ஏவாள்:** ஓ! அன்று சருவேசுரன் சாகவேசாவீர்கள் என்று சபித்தாரல்லவா? இதுதான் சாவோ.

**ஆதாம்:** உண்மையிலே இதுதான் சாவாயிருக்கவேண்டும்.

(துர்நாற்றம் வீசினாலும் ஆபேலின் உடலைக்கட்டியணைத்து ஒப்பாரிவைக்கிறாள் ஏவாள்) இதோ:

"பாவிநான்செய்த பாவத்தால் பாலனே உன்னைநான் பறிகொடுத்தேன்!
சாத்தானை நம்பிஅல்லோ சற்குணனே உன்னைநான் சாகடித்தேன்;
பழத்தை விரும்பிஅல்லோ பொற்குடமே உன்னைநான் அணைத்துவிட்டேன்;
கற்பனையை மீறிஅல்லோ குலவிளக்கே உன்னைநான் போட்டுடைத்தேன்"

(பாவத்தின்கூலி மரணம் என்று ஒலிகேட்கிறது. இதே நேரத்தில் கடவுள் மனிதனாகப் பிறக்கவேண்டும் என்ற கீதம் காற்றிலே கலந்துவருகிறது.)

இ. பேர்னாட்.

## உங்களுக்குத் தெரியுமா?

1. பூர்வ கிரேக்கபிரிவினைக்கிறிஸ்தசபையைச் சேர்ந்தவர்களாய் உலகிலுள்ள ஒரேயொருஅரசதம்பதிகள் யாரென்று!

கிறீஸ்நாட்டின் போல்அரசரும், பிறெடெறிக்கா அரசியுமே உலகிலுள்ள சொல்லப்பட்ட இந்தஒரேயொரு அரசதம்பதிகள். 1439-ம் ஆண்டுக்குப்பின் கிறீஸ்நாட்டின் அரசதம்பதிகள் எவராவதுவத்திக்கான்சென்று முதன்முதலாகப் பாப்பானவர்ஒருவரைச் சந்தித்திருப்பின் அவர்கள் இந்தஅரசதம்பதிகளே. இவர்கள் சந்தித்த பாப்பானவர் காலஞ்சென்ற 23-ம்அருளப்பரே.

2. அமெரிக்க ஜனாதிபதிகளில் எத்தனைபேர் ஏனைய ஜனாதிபதிகளுடன் இனசனஉறவுடையவரென்று!

நான்குஜனாதிபதிகள்ஏனையநான்கு ஜனாதிபதிகளுடன் இனசனஉறவு பூண்டிருந்தனர்: (1) ஜோண் குயின்ஸி அடம்ஸ். இவர் ஜோண் அடம்ஸின்புதல்வர். (2) பென்சமின் ஹறிஸன். இவர் வில்லியம் ஹென்றி ஹறிஸனின் பௌத்திரர். (3) பிறாங்லின் டி றூஸ்வெல்ற். இவர் தியடோர் றூஸ்வெல்ற்றின் ஐந்தாவது வழிவந்த ஒன்றுவிட்டசகோதரர். (4) சசாறி ரெயிலர். இவர் ஜேம்ஸ் மடிஸனின் இரண்டாவதுவழிவந்த மைத்துனர்.

3. எத்தனை கத்தோலிக்கருக்கு ஒரு குருவானவர்வீதம் இருக்க வேண்டுமெனத் திருச்சபை ஆசிக்கிறதென்று!

ஆயிரம் கத்தோலிக்கருக்கு ஒரு குருவானவர் விகிதம் இருக்கவேண்டுமென்று. ஆனால். இதிலும் குறைந்த விகிதமாகக் குருமாரை உலகில் ஐக்கிய அமெரிக்கதேசமும், கனடாவுமாகிய இரண்டும் கொண்டிருக்கின்றன. ஐக்கியஅமெரிக்க தேசத்தில் ஒவ்வொரு 536 கத்தோலிக்கருக்கு ஒரு குருவானவர்வீதமும், கனடாவில் ஒவ்வொரு 750 கத்தோலிக்கருக்கு ஒரு குருவானவர்வீதமும் இருந்துவருகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருளும் உலகிலே

**தாய்க்குலம் :**

பெண்கள் வத்திக்கான் சங்கத்துக்கு வரவழைக்கப்படுவர் என பரிசுத்த தந்தை அண்மையில் குறிப்பிட்டுள்ளார். வத்திக்கான் சங்கத்தின் மூன்றுவது கூட்டத்தொடர் இப்போது நடைபெறுவது தெரிந்ததே. இக்கூட்டத்தொடரில் பெண்கள்பற்றிய விசேட அம்சங்கள் விவாதிக்கப்படும் போது கன்னியர்களில் சிலரும் இல்லறத்தவரான மங்கையர்சிலரும் அவதானிகளாகச் சமூகமளிப்பர்.

**நான்கு இலட்சியங்கள் :**

வத்திக்கான் சங்கத்தின் பிரதான இலட்சியங்கள் நான்கை சுட்டிக்காட்டுகிறுர் பாப்பரசர் சின்னப்பர். முதலாவது: கத்தோலிக்க வேதவழிபாடுகளில் சில மாறுதல்கள். இரண்டாவது: பிரிந்து சென்ற கிறீஸ்தசபைகளுடன் ஐக்கியம். மூன்ருவது: உலகில் சமயப்பற்றை மீண்டும் தட்டியெழுப்புதல். நான்காவது: சமாதானமும், நீதியும் உலகமக்கள் அனைவருக்கும் கிடைத்தல்.

**பாப்புவின் வேண்டுகோள் :**

இம்மாதம் 23-ம், 25-ம், 26-ம் தேதிகளை, ஒருசந்தி, ஒறுத்தற் கிரியைகள், செபதபமுயற்சிகளுடன் வத்திக்கான்சங்க சித்திக்காக அனுசரிக்கும்படி நம் அன்புத் தந்தை சின்னப்ப அண்ணல் வேண்டுகோள் விடுத்துள்ளார். 27-ந்திகதி ஞாயிறுவாரம் வத்திக்கான் சங்கத்துக்கான சர்வதேச செபதினமாக அனுசரிக்கப்பட்டு பரமண்டலமந்திரத்தை பக்தியோடு செபித்தல் வேண்டுமெனவும் கேட்டுள்ளார்.

**மூன்ருவது கூட்டத்தொடர் :**

வத்திக்கான்சங்க மூன்ருவது கூட்டத்தொடர் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. முதலாவது கூட்டத்தொடரின்போது 2500 ஆயர்கள் ஊர்வலமாக இராயப்பர் மகாலயத்துக்கு வந்தார்களல்லவா? அதுபோலின்றி ஆயர்கள் அமைதியாக ஆலயத்துள் புகுந்ததும் கூட்டத்தொடர் ஆரம்பமானது. பாப்பரசர் ஆயர்களுடன் திவ்வியபூசையை ஒப்புக்கொடுத்து கூட்டத்தொடரை ஆரம்பித்தார்.

**தொடர்பு நிலையம் :**

மூன்ருவது கூட்டத்தொடர் ஆரம்பமாவதற்கு ஒருவாரத்துக்கு முன்னரே வத்திக்கான் பொதுச்சங்க பத்திரிகைத் தொடர்பு நிலையம் செயல்பட ஆரம்பித்துவிட்டது. வத்திக்கான் சங்கநடபடிக்கைகள்பற்றி உலகமெங்குமுள்ள பத்திரிகைகள், வானெலிகள் ஆகியவற்றுக்கு சரியான தகவல்களைக் கொடுப்பதே இந்நிலையத்தின் அலுவல். பத்திரிகைத் தொழிலில் கைதேர்ந்த குருமார் பலர் இங்கு தொண்டாற்றுகின்றனர்.

**நிருபர்களின் தொகை :**

வத்திக்கான்சங்க முதலாவது கூட்டத்தொடருக்கு உலகமெங்கணுமிருந்து 1965 பத்திரிகை நிருபர்கள் வந்திருந்தனர். தற்போதைய கூட்டத்தொடரில் இத்தொகை 300ஆல் அதிகரிக்கப்பட்டுளது. எனவே, வத்திக்கான் சங்கத்தில் பங்குபெறும் ஆயர்களின் தொகைக்கு சமமாக பத்திரிகை நிருபர்களும் உளர்.

**கர்தினல் காலமானர் :**

கர்தினல் கிளமென்ற் எமிலி றேகுஸ் ஆண்டகை காலமாகிவிட்டார். இவர் பிரித்தானியின் பிதாப்பிதா. றெனஸ் மேற்றிராசனத்தின் அதிமேற்றிராணியார். இறக்கும்போது வயது 83 ஒருமேசனின் புதல்வர் இவர். காஸ்ரெஸ் குருத்துவ பயிற்சிக்கழகத்தில் பேராசிரியராகவும், அதிபராகவும் முன்பு கடமையாற்றியவர். 1929-ல் மேற்றிராணியாரானர். 1934-ல் அதிமேற்றிராணித்துவபதவி கிடைத்தது. பன்னிரண்டாம் பத்திநாதர் 1940-ல் இவருக்கு கர்தினல்களின் தலைச்சீராவை அளித்தார். இரண்டாம் உலக மகாயுத்தகாலத்தில் ஜேர்மானியரின் கொடிய செயல்களை எதிர்த்து அஞ்சா நெஞ்சுடன் பாதிக்கப்பட்டோருக்கு உதவினர். அதற்காக பிரான்சிய அரசு இவருக்கு பல கௌரவபட்டங்களை வழங்கியது. துறவறத்தில் சேருமாறு இளைஞர்களை இடைவிடாது தூண்டிக்கொண்டேயிருப்பது இவரது பெரிய அலுவல். இவரின் பிரிவால் கர்தினல்மாரின் தொகை 77 ஆகிவிட்டது.

**கத்தோலிக்கர் தொகை :**

அவுஸ்திரேலியக் கண்டத்தின் கத்தோலிக்கர் தொகை 2546863என ஒரு வெளியீடு தெரிவிக்கின்றது. இது சென்ற வருடத்திய தொகையைவிட 2லட்சத்தால் அதிகப்பட்டுள்ளது.

சா. பெ.

## திருச்சிலுவைக் கன்னியரின் முதல் வாக்குத்தத்தம்

"முற்காலம் காணிக்கைகளையும், தகனப்பலிகளையும் சர்வேசுரன் ஏற்றுக்கொண்டார். ஆனல், புதியஏற்பாட்டில் தமது திருக்குமாரனின் இரத்தத்தால் மீட்கப்பட்ட ஒவ்வொரு ஆன்மாவையும் விரும்புகிறுர். அதற்காகவே குருக்கள், சந்நியாசிகள், கன்னியாஸ்திரிகள்சபைகள் ஏற்படுத்தப்பட்டன. ஆனல், விசேஷமாக இன்றையசூழ்நிலையில் மேலைத்தேய குருமார், கன்னியர் தாயகம் திரும்பவேண்டியிருப்பதால் நமதுநாட்டிலேயே இவ்விதசபைகளும் தியாகச்சின்னங்களும் அவசியம் தேவைப்படுகின்றன. இங்கு கூடியிருக்கும் பெற்றேரைப்போன்று ஏனைய பெற்றேரும் விசுவாசமுடையோராய் வீரத்தியாகம் படைத்தவர்களாய் தம் குடும்பத்தில் ஒரு பிள்ளையையாவது தேவனுக்கு அர்ப்பணிக்க முன்வரவேண்டும்.

"இப்போது நடைபெறவிருக்கும் திருச்சடங்கில் தேவன்முன்பாகவும், சகல அர்ச்சியசிட்டர்கள், சம்மனசுகள் சாட்சியாகவும்நிற்க மூன்று நவகன்னியர் தமது உடல், பொருள், ஆவி இத்தம்யாவையும் தேவனுக்கு அர்ப்பணித்து, அமைச்சல், கற்பு, தரித்திரம் என்னும் மூன்று வாக்குத்தத்தங்களையும் அனுசரிப்போம் என்று வாக்குப்பண்ணுவார்கள். இன்னும் இருவர் தமது சதாகால வாக்குத்தத்தம் அதாவது சாகும்வரை நித்தியவாக்குப் பண்ணுவார்கள்."

இவ்வாறு பாஷையூர்ப்பதி திருச்சிலுவைக் கன்னியரின் முதல்வாக்குத்தத்த வைபவத்தின்போது நடந்த திவ்விய பூசைப்பலியின் நடுப்பகுதியில் வண. பிதா ஜி. ரி. பாலசுந்தரம் அவர்கள் தம் பிரசங்கத்தில் குறிப்பிட்டார்.

அன்றுகாலை 6-30மணிக்கு வண. பிதா பி.ஈ. அல்பிறட், வண. பிதா ஜி.ரி. பாலசுந்தரம், இவர்கள் துணைபுரிய வண.பிதா ஜே புறேகான் அவர்களால் திவ்வியபூசைப்பலி ஆரம்பிக்கப்பட்டது. திருப்பலியின் நடுப்பகுதியில் மூன்று நவகன்னியரும், இருகன்னியரும் தீபத்தை ஏந்திய வண்ணமாய் பீடத்தின் முன்பாகச்சென்று முழந்தாட்படியிட்டு தமது வாக்குத்தத்தங்களை ஒப்புக்கொடுத்தனர். பின்புதெதேயும் என்ற நன்றிக்கீதம் பாடப்பட்டு, பலியின்மறுபகுதி ஆரம்பிக்கப்பட்டது. ஈற்றில் நற்கருணை ஆசீர்வாதத்துடன் திருச்சடங்கு இனிதே முடிவாயது.

ஆசிரியர் க. வஸ்தியாம்பிள்ளை அவர்கள்

அமரத்துவமடைந்த

### 3-ம் வருட மரணஞாபகம்

**தோற்றம் :** 14-2-1909 **மறைவு :** 21-9-1961

புலம்பல்

மைந்தரெமை எடுத்தணைத்த கரங்கள் எண்ணி
மாசற்ற வதனமதின் மலர்ச்சி எண்ணி
சிந்தனையைப் பிழிந்தெடுக்கும் செயல்கள் எண்ணி,
சீராட்டிப் புரந்துவந்த சிறப்பை எண்ணி
நொந்தழுது புலம்புகிறேம் கருணைத் தந்தாய்!
கொடிப்பொழுதும் உமைமறவோம் மோட்ச வீட்டின்
கந்தமலர்ச் சோலையினில் இனிதே வாழக்
கர்த்தனடி நித்தமியாம் பணிகின்றேமே.

'சீவியத்தில் இவரைநாம் நேசித்தோம்; நம்முடைய செபங்களால் கர்த்தரின் வீட்டுக்குள் இவரைநாம் இட்டுச் செல்லும்வரை கைவிடாதிருப்போமாக.'

**சமாதானத்தில் இளைப்பாறுவாராக**

இவரது ஆன்மசாந்திக்காக எதிர்வரும் 28-ந்தேதி திங்கட்கிழமை காலை 6மணிக்குப் பரிசுத்த அடைக்கலநாயகி ஆலயத்தில் ஒருதுக்கப்பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

துயருறும் :

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

நம். 11, மாட்டீன் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

பாகிஸ்தானில் கடமையாற்றும் ஷீரர் மேற்றிராணியார் அமெரிக்காவைச் சேர்ந்தவர், அவரது 9 சகோதரர்கள் துறவிகள். அவர்களுள் மூவர் குருக்கள். மூவர் சந்நியாசிகள், மூவர் கன்னியர்கள்.

**நன்றி**

எங்கள் அன்புத் தந்தையரின் அந்திமசடங்குகளுக்குச் சமூகமளித்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும்வைத்த வண. குருப்பிரசாதிகள், கன்னியர், அன்பர்கள், அனுதாபிகள், இனசனர் யாவர்க்கும் எம் ஆழ்ந்த நன்றியைத் தெரிவிக்கிறேம்

ம. லீனஸ்
சிஸ். மே. பெனிக்னு
சிஸ். மே. வலன்ரைன்


### மரணச் செய்தி

கரம்பன் கிழக்கு அம்பலப்புல வாசரும், பலராலும் நன்கறியப்பட்டவரும், கோவிற் கட்டளைக்காரரில் ஒருவரும், அர்ச் பிறன்சீஸ்குவின் மூன்றும்சபை அங்கத்தவரில் சகோதரர் பபியான் எனப் பெயர் கொண்டவரும், அமைதி, சாந்தம், இன்சொல், அடக்கம் ஆகிய நற்பண்புகளால் யாவருக்கும் ஓர் எடுத்துக்காட்டாக விளங்கி வந்தவரும், தமது அருமைப் புதல்விகள் இருவரையும் மனப்பூர்வமாகத் தேவதொண்டுக்கு அர்ப்பணித்து, ஏகபுதல்வனேடு வாழ்ந்துவந்தவருமான திரு. எஸ். மனுவல்தம்பி என்பவர் சிலகாலமாக நோய்வாய்ப்பட்டிருந்து அந்திய தேவதிரவிய அனுமானங்களைக் குறைவறப்பெற்று, இறுதிவரை பூரணநல்லறிவுடன் இருந்து, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், இனசனருக்கு நன்மதிகள்கூறி இம்மாதம் 12-ம் திகதி சனிக்கிழமை அதிகாலை தமது ஆன்மாவைப் படைத்தோன் கையில் ஒப்படைத்து மரணத்திரையில் மறையலானர்.

மறுநாள் இவரின் பூதஉடல் பெருந்திரளான சந்நியாசர், கன்னியர் இனசனர், அன்பர்கள் புடைசூழ செபங்கள், துக்ககீதங்களுடன் சேமக்காலை கொண்டு செல்லப்பட்டு, வண. கட்டளைக்குரவர் சொற்பொழிவாற்றி துணைக்குருப்பிரசாதிகளுடன் கடைசிஆசி அளிக்க நல்லடக்கம் செய்யப்பட்டது. இவரை இழந்து துன்புறும் பிள்ளைகள், மருமகள், பேரப்பிள்ளைகளுடன் நாமும் அனுதாபப்படுகிறேம்.


அல்ஸ்ட்ரன்

மீன்பிடி வலைகள்




அல்ஸ்ட்ரன் மட்டுமே இவ்வனுகூலங்கள் அனைத்தையும் அளிக்கவல்லது.

CIC அல்ஸ்ட்ரனின் விசேஷத் தன்மைகளை மற்ற நார்களுடன் ஒத்திட்டுக் காட்டும் இலவசப் புத்தகம் ஒன்றை பெற இன்றே எமக்கு எழுதுக.

கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ்(கொழும்பு)லிமிடெட்,
தபால் பெட்டி 352, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்கின் இரு கண்கள்

ஏதோ ஒரு நூலில் கத்தோலிக்க பெருந்தகை ஜாக் மரித்தேங் எழுதியிருக்கிறார்:

**"கிறிஸ்தவன் இவ்வுலகில் மிகமிகக் கவனமாக நடக்கவேண்டியிருக்கிறது பூமியின் மேல்தான் அவன்பாதங்கள் பதியவேண்டும். ஆனால், நடக்கும் போது அவன் கண்களோ, ஒன்று அவன்போகவேண்டிய வானைநோக்கி, மற்றது அவன் மிதிக்கின்ற பூமியைநோக்கி இருக்கவேண்டும். இவ்விதம் ஒருகண்மேலும் மறுகண் கீழும் பார்க்கநடப்பது, அப்பப்பா, எளியகாரியமா?'**

உண்மைக் கிறிஸ்தவனாக வாழ்வது எளிதான காரியமேயல்ல. அதைப் போலவே 'பங்கு' என்னும் கிறிஸ்தவச் சிறு மந்தையின் வாழ்வும். கிறிஸ்தவர்களால் ஆனதுதானே 'பங்கு'?

சிறந்த பங்கென்றால் அதற்கு கூரிய இருகண்கள் வேண்டும். ஒன்று வானை நோக்கி, மற்றொன்று பூமியை நோக்கி; ஒன்று இறைவனோடு மனிதனை இணைக்கும் வழிபாட்டை நோக்கி, மற்றொன்று மனிதர்களைப் பிணைத்து முன்னாக்கும் சமூகசேவையை நோக்கி.

திருவழிபாடு, சமூகசேவை—இவை இரண்டும் ஒரு பங்கு நிர்வாகத்தின் தலையான பணிகள்; பங்கின் இரு கண்களும் பதியவேண்டிய குறிக்கோள்கள்.

## பங்கை உருவாக்கும் பலியுணவு:

இவை இரண்டிலும் அதிகம் முக்கியமானது திருவழிபாடுதான். திருச்சபையை பங்கு பங்காகப் பிரித்ததே திருவழிபாடுதான். ஏனென்றால் திருச்சபை முழுவதும், அல்லது ஒரு மேற்றிராசனம் முழுவதும் ஒரே நற்கருணைப் பலியில் ஒருசேர நேராகப் பங்கெடுக்க முடியுமா? முடியாது, எனவே, திருவழிபாட்டின் வசதிக்காக திருமறையின் பெருந்தொகையோர் பங்குபங்காகப் பிரிந்து கூடவேண்டியிருக்கிறது.

எனவேதான் ஒருவர் சிறிது அழுத்திக் கூறிவிட்டார்: "பங்கை உருவாக்குவது நற்கருணை. நற்கருணையை உருவாக்குவது பங்கு. பங்கும் நற்கருணையும் உள்ளுறக் கலந்தவைகள்." அதாவது — நற்கருணைப் பலியின் வசதிக்காக திருச்சபையின் பங்குகள் உருவாயின, உருவாகின்றன. அதே நேரத்தில் பங்குக்குருக்கள் தத்தம் மந்தைகளோடு சேர்ந்து பங்கு பங்காகப் பிரிந்து பலி செலுத்துவதால்தான் உலகெங்கும் நற்கருணை உறைய முடிகிறது.

எனவே, பங்குநிர்வாகத்தில் பலிபீடமும் திருவழிபாடுகளும் மையமான இடத்தைக் கொள்ளவேண்டும். அதற்கு மாறாய், பங்கு நிர்வாகம் என்றதும் பணப்பெட்டியைத்தான் நினைக்கிறார்கள் பலர்!

## பங்கின் சிகரமும் ஊற்றும்:

2-ம் வத்திக்கான் பொதுச்சங்கம் அதிகார பூர்வமாக வெளியிட்டிருக்கும் (De Sacra Liturgia) திருவழிபாட்டு நூலின் வார்த்தைகளைக் கேளுங்கள்: "திருச்சபையின் பணிகளெல்லாம் சேரவேண்டிய சிகரம் திருவழிபாடு; அதே நேரத்தில் திருச்சபையின் சக்தியெல்லாம் ஊறியெழும் ஊற்றும் திருவழிபாடே" (எண். 10). "திருச்சபையின் வேறெந்தப் பணியும் திருவழிபாட்டின் சக்திக்கு ஈடாகாது" (எண். 7).

பங்கின் பணிகளுக்கெல்லாம் சிகரமும் ஊற்றும் பங்குக்கோயிலில் நடக்கும் திருவழிபாடுதான் என்பதைப் பங்குக் கிறிஸ்தவர்கள் உணரவேண்டும். கோயிலில் வழிபாடு நடக்கும்போது பங்கின் அங்கத்தினர்கள் தெருக்களில் பஜனை பாடித்திரிவது சரியான செயலல்ல.

பங்கில் இயங்கும் பக்திச்சபைகள் யாவும் (மரியாயின்சேனை, சேவாசங்கம், மாதாசபை போன்றவை யாவும்) பங்குக் கிறிஸ்தவர்கள் மத்தியில் திருவழிபாட்டு ஆர்வத்தைப் பெருக்குவதில் முனைந்து உழைக்கவேண்டும். பூசைப்பலிக்கு வராதவர்களைத் தேடிப் பிடித்து, நற்கருணையை பங்கிலுள்ள எல்லோரினதும் பொதுவிருந்தாக்க உழைப்பது, பூசைப்பலிபற்றி பிறருக்கு விளக்கவுரை தருவது, பூசைப்பலி போன்ற திருவழிபாடு முறைகளைக் கீதங்களாலும், செபத்தாலும் கவர்ச்சிப்படுத்துவது—இவை நம் பக்திச் சபைகளின் பணியில் முதலிடம் பெறவேண்டும்.

— சுவாமி நற்சீசன் —

## வேண்டாம் இந்த விபரீதங்கள்:

"நான் திராட்சைச்செடி, நீங்கள் அதன் கொடிகள்; ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுதியான கனியைத் தருவான். ஏனெனில், நான் இல்லாமல் உங்களாலே ஒன்றும் செய்ய முடியாது" (அரு. 15/5) என்று தெள்ளத் தெளிவாகக் கூறியிருக்கிறார் நம் யேசு இரட்சகர். திருவழிபாட்டைப்போல் நம்மை நம் யேசு இரட்சகரோடு இறுகப் பிணைப்பது வேறொன்றும் இல்லை என்று சொல்லவும் வேண்டுமா?

இது இப்படியிருக்க, பூசைப்பலியிலும் பிறவழிபாடுகளிலும் ஈடுபாடு இல்லாமல் பங்கின் பொது முன்னேற்றத்திற்காக சிலர் உழைப்பது மடமைச் செயல் அல்லவா? சில ஊர்களிலே பங்கின் ஞானவாழ்வில் அக்கறையற்றவர்கள் பங்கின் நிர்வாகத்தைக் கண்காணிக்கும் "பிரதானிகளாக" "முடிதங்களாக" இருப்பது வருந்துதற்குரியது.

அதே நேரத்தில் பங்குக் குருவானவர் கோயிற் காரியங்களிலும் திருவழிபாடு வளர்ச்சியிலும் தன் முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டும் என்று பங்குக் கிறிஸ்தவர்கள் எதிர்பார்ப்பதும் சரியே.

சில ஊர்களிலே இன்னொரு விபரீதத்தைக் காண்கிறோம். தங்கள் பங்கிற்காக எதையும் செய்யத் தயாராயிருக்கும் வாலிபர்கள் பலர் பங்கின் திருவழிபாட்டில் பங்கெடுப்பதில்லை. இதை பெண்களுக்கு என்று விட்டு விடுகிறார்கள். எனவேதான் சில ஊர்க் கோயில்களிலே செபிப்பதே பெண்கள், பாடுவதும் பெண்கள், எல்லாமே பெண்கள்மயமாக இருக்கிறது!

பங்கின் ஆண்களும் பெண்களும்; பெரியவரும், சிறியவரும் திருவழிபாட்டில் போட்டியிட்டுப் பங்கெடுக்க வேண்டும். அதுவே இலட்சியப் பங்கு.

## ஆதித் திருச்சபையைப் பாருங்கள்!

ஒரு சமயம தமிழக மேற்றிராணியார் ஒருவர் அமெரிக்காவில் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார். அப்பொழுது அமெரிக்கர் ஒருவர் எழும்பிக் கேட்டார்: உங்கள் இந்தியாவை விரைவில் மனந்திருப்ப ஒரு சில வழிகளைச் சொல்லுங்கள்."

"சில வழிகள் இல்லை. ஒரேயொரு வழிதான் உண்டு" என்றார் மேற்றிராணியார்.

"அந்த ஒரே வழி யாது?" என வினவினார் அமெரிக்கர்.

"அதுதான் அன்பின் வழி," என்று சொல்லி, மேற்றிராணியார் விளக்கத் தொடங்கினார். இந்தியாவிலேயே பள்ளிக்கூடங்களையும், கல்லூரிகளையும் நடத்திப் பார்த்துவிட்டோம் — அவ்வளவு பயனில்லை. ஏனென்றால் நம்மை விட அதிகத் திறம்பட கல்வி ஸ்தாபனங்களை நடத்திக் காட்டி விட்டார்கள் அரசாங்கமும் பிறதனியார்களும். மேலும் வரவர நம் கத். கல்விஸ்தாபனங்கள் பல அதிகாரத்தையும், பணத்தையும், புகழையும் நாடிப் பாடுபடுகின்றனவேயொழிய, கிறிஸ்தவ அன்பைப் பரப்புவதில் ஏனோ மறந்து வருகின்றன.

எழுத்து அப்போஸ்தலத்துவத்தில் ஈடுபடலாம் என்றால், பிறமக்கள் நம்மை இதில் புறமுதுகு காட்டச் செய்துவிடுகிறார்கள். கூட்டுறவுச் சங்கங்களும், அனாதை மடங்களும், மருத்துவ மனைகளும் எழுப்பலாம் என்றால், இதிலும் அரசாங்கம் நம்மை விட அதிகம் செய்துவருகிறது. மேடைப் பிரசங்கத்தில் இறங்கலாம் என்றால், கிறிஸ்தவர்களின் வாழ்க்கை நம் பிரசங்கத்திற்கு எதிராகச் சாட்சி சொல்கிறது.

ஆகவே, ஒரேயொரு வழிதான் உண்டு. ஆதித்திருச்சபை கடைப்பிடித்தவழி. அன்பின்வழி—சமூகம் சமூகமாக கூடிவாழும் கிறிஸ்தவர்கள் (பங்குகள்) கிறிஸ்தவ அன்பை தங்களுக்குள்ளே வாழ்ந்து

( 6-ம் பக்கம் பார்க்க )

## மாவளன் அச்சகத்தார் மருதமடுத் திருயாத்திரை

அர்ச். சூசையப்பர் அச்சகத்தைச் சேர்ந்த பணியாளர்கள் அனைவரும் தங்கள் அதிபர் சுவாமியவர்கள் தலைமையிலே சென்ற 16ஆம் தேதி புதன்கிழமை பிற்பகல் பஸ்மூலம் மருதமடுத் திருப்பதிக்கு யாத்திரை செய்யுமுகமாக 2மணிக்கு முன்பதாக அச்சகத்தை வந்தடைந்தனர். எல்லோரும் தேவதாயை வணங்கி ஆசீர்வாதம் இரந்துகேட்டு இரதத்தில் ஏறிக் கொண்டனர். இரதமும் நகரத்தொடங்கியது. சிலநிமிஷங்கள் சென்றன. அனைவரும் மரியாயின் கீதங்கள் அழகாகப் பாட ஆரம்பித்தனர், இவ்வித செபவோசை, சங்கீதஓசை மத்தியில் எல்லோரும் மருதமடுத் திருப்பதியையடைந்து பஸ்வண்டியிலிருந்து இறங்கியதும் ஆலயமுன்றிலிலிருந்து தேவதாயை இரந்துநின்றனர். அதன்மேல் மடுப்பதிப் பரிபாலனர் சுவாமியவர்கள் ஆயத்தம் செய்திருந்த இல்லிடங்களுக்குப்போய்ச் சேரலாயினர்.

அடுத்த வியாழன், வெள்ளி, சனி முத்தினங்களையும் ஒரு ஞானஒடுக்க காலமாகப் பயன்படுத்தி ஆத்மீகநலன் பெறும் வழிகளில் கழிக்கலாயினர். அத்தினங்களில் வண. ஜே. கிறிஸ்சோஸ்தம் சுவாமியவர்கள் ஞான ஒடுக்க போதகராயிருந்து அழகிய தமிழில் ஆற்றொழுக்குப்போன்று அருமையான பிரசங்கம் செய்தார். அத்துடன் அதிபர்சுவாமியவர்களும் ஆழ்ந்த கருத்துக்களை உதாரணங்கள், உவமைகள்மூலம் எடுத்துக்கூறி புத்தியுரைகள் புகட்டியும், செபதபங்களில் பங்குபற்றி வழிநடத்தியும், திவ்விய பூசை அவ்வப்போது நிறைவேற்றியும், பாவவிமோசனமளிக்க ஏற்பாடுசெய்தும் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார். சனிக்கிழமைமாலை சற்பிரசாத ஆசீர்வாதத்தின் பின்னர் எல்லோரும் சுற்றுப்பிரகாரமாய் லூர்துகெபிக்குச் சென்றனர். அவர்கள் கைகளில் கொழுந்துவிட்டெரிந்த மெழுகுவர்த்திகள் அவர்கள் இதயங்கள் தாய் அன்பினால் எரிவதை எடுத்துக்காட்டின. வாழ்க! வாழ்க! என்றஓசை அக்கானகத்தின் அமைதியைக் கிழித்துக் கொண்டு மேலெழுந்தது. லூர்து மாதாவின் பாதத்தண்டையில் எல்லோரும் தங்களை அந்த நாயகிக்கு ஒப்புக்கொடுத்தனர்.

அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமை எல்லோரும் திவ்வியபூசைகண்டு திவ்வியநன்மை பெற்றார்கள். அன்னையை விட்டுப்பிரியும் நேரம் அண்மியது. புனிதபதியைப் பிரியமனமில்லாதவராய் எல்லோரும் தாயாரது இன்ப சந்நிதானம்சென்று, பாதாரவிந்தத்தை முத்திசெய்து ஆசீர்கேட்டு இரதத்தில் ஏறினர். இல்லம் சேர்ந்தனர். இந்த மகத்தான யாத்திரையை சித்திகரமாக முடிக்க பலவகையாலும் செயலாற்றிய அச்சகஅதிபர் வண. G. T. பாலசுந்தரம், O. M. I. சுவாமிகள் மனமுவந்த பாராட்டுக்குரியவர்கள்.

—கண்டு களித்தோன்

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபையார் வழமைபோல் ஐப்பசிமாதம் 4-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை தமது பிதாவாகிய அர்ச் பிரான்சீஸ்குவின் திருநாளைக் கொண்டாடுவார்கள். முந்தின மூன்றுதினங்களிலும் காலை 6-15மணிக்குத் திவ்விய பூசையும், மாலை 6-15 மணிக்குத் திரிதின ஆராதனையும், சனிக்கிழமை 3-ந்தேதி மாலை வெளிச்சுற்றுப்பிரகாரமும் நடைபெறும். 4-ந்தேதி ஞாயிறன்று காலை 6-15மணிக்குத் திருநாட்பூசையும், பி. ப. 4மணிக்கு மாதாந்த கூட்டமும், திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதமும். தோட்டஉபசரணையோடு திருநாள் முடிவாகும்.

A. S. FRANCIS of MARY,
சபைக் கர்த்தருக்காக

யாழ்ப்பாணம்,
23-9-64.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் இரக்கத்தினாலும், அர்ச். ஆரோக்கியநாதரின் மன்றாட்டினாலும் எனது நெஞ்சில் உண்டான வருத்தம் சுகமடைந்ததையிட்டு அவருக்கு நன்றி கூறி நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன். அவருடைய நாமம் எங்கும் பரம்பி என்றென்றும் போற்றிப் புகழப்படுவதாக.

பி. இன்னேசியாப்பிள்ளை

புதுக்குடியிருப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடகமா ?

நாம் விரும்பிப் பிறக்கவில்லை; பிறந்துவிட்டோம்
நமது பங்கை நேர்மையுடன் செய்வோம், இங்கு
நாம்விரும்பி இறப்பதில்லை ; இறப்போம் ; பூவில்
நல்லதையே செய்திடுவோம் வாழும்வரை.

எமக்கு முன்னே எமைப்பற்றி நினைந்து எம்மை
இவ்வுலகிற் கனுப்பி வைத்தார் இறைவன், அன்பால்
நமக்குரிய நல்வழியைக் காட்டுகின்றார்
நாம் நடப்போம் அவர் ஒளியில் வழிதப்பாது.

நாடகமா இவ்வுலக வாழ்க்கை? இல்லை
நடிப்பதுவா எம்வேலை? இல்லை ; உண்மை
வீடடைய உதவிடுமா? வேஷம், இதை
விளங்கிவிட்டால் எம் வாழ்வில் உண்மை தோன்றும்.

ஆண்டு ஒன்று சென்றிடவே நாமும் சேர்ந்து
அடி எடுத்து வைக்கின்றோம், மரணம் நோக்கி
மாண்டபின்பும் யாவருக்கும் வாழ்வு உண்டு
மறுவுலகில் ; மறப்பின்றி மனதிற் கொள்வோம்.

அழிகின்ற உடலினுள்ளே ஆன்மா உண்டு
அதைக் காத்தல் நம் பொறுப்பு ; இதைமறந்து
ஒழிகின்ற செல்வத்தைப் புகழைத்தேடி
ஓடுவதால் பயன்ஏது? துணைதான் ஏது ?

நேற்றிருந்தார் இன்றில்லை ; இன்றிருப்பார்
நிச்சயமாய் இறந்திடுவார், ஒரு நாளைக்கு
போற்றுகின்ற அறிவைவிட, மரணம் நன்கு
புத்தி சொல்லும் நேர் வழியில் நடப்பதற்கே !

ஆசிரியர், ச. அமிர்தநாதர்

## பங்கின் இரு கண்கள்

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

காட்டுவது, கிறிஸ்தவ சமூகசேவையை தங்களுக்குள்ளே நடைமுறையில் செய்துகாட்டுவது. அப்போது நமது பங்குகள் உலகைக் கவரும் காந்தங்களாக மாறும்.

இம்மேற்றிராணியார் சுட்டிக்காட்டிய "சமூகசேவையே" நம் பங்கின் இன்னொரு கண் பதியவேண்டிய பணிக்களம். இதை அவராகச் சொல்லவில்லை. திருச்சபை பலுகிப் பெருகின நாட்களின் சம்பவங்களே இதைச் சொல்லுகின்றன.

"விசுவாசிகளான எல்லோரும் சகல பொருட்களையும் தங்களுக்குப் பொதுவாக வைத்திருந்தார்கள். அவனவனுடைய அவசியத்திற்குத் தக்கபடி அவைகளைச் சகலரும் பகிர்ந்து வந்தார்கள். அல்லாமலும் அவர்கள் ஒரே மனமாய் அனுதினமும் தேவாலயத்தில் நிலைத்து, வீடுவீடாய் அப்பமும் பகிர்ந்து, ஆனந்த அக்களிப்போடும் கபடில்லா இருதயத்தோடும் போசனம் பண்ணி வந்தார்கள்" (அப். நட. 2/44—46).

### பொதுத்தீர்வையின் பொருள்:

இவ்விதம், பங்கிலுள்ளோரின் பொருட்கள் எல்லோருக்கும் பொதுவாக இருக்கவேண்டும் என்று நாம் சொல்லவில்லை. ஆனால், ஒரு பங்கிலுள்ள பணக்காரக் கிறிஸ்தவர்கள் நம் அருகிலே பசியால் வாடும் நிர்வாண ஏழைகளைக் கவனியாமல் இருந்தால், அப்பங்கை எப்படி "கிறிஸ்தவசமூகம்" என்று அழைப்பது?

பங்கில் உறையும் உணவுப் பஞ்சம், உடைப் பஞ்சம், நோய் நோக்காடுகள் இவைகளை பங்கிலுள்ள கிறிஸ்தவர்களே ஒன்றுசேர்ந்து நீக்கவேண்டும். இதுவே பங்கின் முதல் சமூகசேவை. இதுவே பொதுத்தீர்வையின் ஒரே பொருள் (மத். 25, 34). இதற்கான வழிகளை ஆராய்ந்து செயல்படுத்துவதே பங்கிலுள்ள பக்திச்சபைகளின் தலையாய கடமை.

பங்கின் இருகண்கள் திருவழிபாடும் சமூக சேவையும். இதற்கு ஆதித்திருச்சபையே சாட்சி— "விசுவாசிகள் செபத்தில் நிலைத்திருந்தனர்" (திருவழிபாடு). "யாவற்றையும் பகிர்ந்துண்டார்கள்", சமூகசேவை).

—ஞானதூதன்

● கர்தினால் பாதுகாவலரென்று கடந்த 700 வருடங்களாக இருந்து வந்த பதவியையும், வரிசையையும் பாப்பரசர் இப்போது நீக்கிவிட்டிருக்கின்றார். அவர் இனிமேல் சந்நியாச சபைகளுக்கோ அன்றேல் பிறசபைகளுக்கோ கருதினால்மாரான பாதுகாவலரை நியமிப்பதில்லையெனத் தீர்மானித்திருப்பதாய்ச் செய்தி பரந்திருக்கிறது.

● டபிளினைத் தலைநகராகக் கொண்ட சுதந்திரகுடியரசு அயர்லாந்திலே கடைசியாக எடுக்கப்பட்டுள்ள கணக்கின்படி அத்தேசமக்களில் 94.9சதவிகிதமானோர் கத்தோலிக்கரே. அதாவது அங்குவதியும் 28இலட்சத்து 9ஆயிரம்மக்களில் 26 இலட்சத்து 75ஆயிரம்பேர் கத்தோலிக்கரே.

● ஜப்பானின் தலைப்பட்டணமாகிய ரோக்கியோ நகரிலே அண்மையில் நடைபெறவிருக்கின்ற ஒலிம்பிக் விளையாட்டிலே விளையாட்டுக்காரரும், மற்றும் அதிகாரிகளுமாய் 8,075 பேர் கலந்துகொள்ளவிருக்கின்றனர். பொதுவிலே உலகிலுள்ள 96 நாடுகள் போட்டிகளிலே கலந்துகொள்ளும்.

● சுவிற்சர்லாந்துதேச கோனிஸ் நகரிலே சமீபத்தில் குருப்பட்டம்பெற்றுக்கொண்ட வண. அல்பேட் ஹீப் சுவாமியார் அங்குள்ள ஒருபுறொட்டஸ்தாந்தகோவிலிலே தமது முதற் பூசைப்பலியை நிறைவேற்றினார். இதற்குக்காரணம், அங்குள்ள கத்தோலிக்க கோவில் மிகச்சிறிதாயிருந்தமையே. பூசையின்போது இக்கோவில் பாதிரியார் உட்பட அநேகபுறொட்டஸ்தாந்தர்கள் சமூகமாயிருந்தார்கள்.

## சமாதானம் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள்" என்று அவர்கேட்டுக்கொள்கின்றார்.

தென்ஆபிரிக்க மேற்றிராணிமாரும் கேப் டவுண் அதிமேற்றிராணியாரின் தலைமையில் ஒன்றுகூடிச் சகல இனத்தவர்களையும், சகல தேசத்தவர்களையும் சமாதானம், நீதி, சிநேகம் உலகில் நிலவ மன்றாடும்படி ஒரு விண்ணப்பம் விடுத்திருக்கின்றனர்.

சைப்பிறஸ், மலேசியா, ஆபிரிக்கநாடுகளில் சமீபத்தில் ஏற்பட்டிருக்கும்கலகங்களே இவ்விசேஷ விண்ணப்பங்களுக்குக் காரணமாகலாம்.

● நியூயோக்நகரில் நிகழ்ந்துவருகின்ற உலகபொருட்காட்சி ஆரம்பமாகியபின் முதல் 40 தினங்களிலும் அங்குள்ள வத்திக்கான் காட்சிமண்டபத்தை 26 இலட்சம் மக்களுக்குமேல் தரிசித்துள்ளார்கள். தினமும் சராசரியாக 65,535 பேர் அதனைத் தரிசித்தவண்ணம் இருக்கின்றார்கள்.

● இன்று உலகின் மகாப்பெரிய முதல் ஐந்து நகரங்களாக முறையே ஜப்பானின் தலைநகரான ரோக்கியோ (சனத்தொகை 86,13,000) நியூயோக் (77,81,984) ஷாங்காய் (69,00,000) மஸ்கோ (63,17,000) பம்பாய் (44, 22,165) ஆதியன விளங்குகின்றன.

## பம்பாய் சற்பிர ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கும், விசேஷமாக ஆசியஉலகத்துக்கும் சற்பிரசாதத்தில் கிறீஸ்துநாதர் மக்களுடன் என்றும் வசித்துவருகின்ற உண்மையை அழுத்தம் திருத்தமாக எடுத்துக்காட்ட உதவுகின்றது, இவ்வைபவத்தை மிகவும் பிரியத்துடன் அவதானித்து வருவோம். மனித இரட்சணியத்தில் ஒருபுதியசகாப்தத்தின் முன்னோடியாக இது தோன்றுகின்றது" என்றார் பாப்பரசர்.

## தனியார் பள்ளி ...

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

கத்தோலிக்கவேத அறிவில்லாததும், கத்தோலிக்க சமயபயிற்சியற்றதுமானகல்வி கத்தோலிக்கருக்கு உதவாது. இத்தகைய கல்வியை அவர்கள் பெற்றுக்கொள்ள அரசாங்கம் வசதிகள்செய்ய முடியாவிடில், அதை அவர்கள் பெற்றுக்கொள்ளத் தம்மாலானவற்றைச் செய்யவேண்டும்."

இவ்வாறு அண்மையில் சிறிதுகாலம் தங்கியிருக்கும் அதிசங்கைக்குரிய பிறதர் ஒட்டுல்அவர்கள் மொறட்டுவா அர்ச். செபஸ்தியார் கல்லூரியில் அவருக்கு அளித்த வரவேற்பில் கூறினார்.

எல்லோரும் விரும்பிச்செல்லும் விருந்தினர் மாளிகை

"பாம் கோட்"

பிரதானவீதி, யாழ்ப்பாணம்.

இங்கே உள்ள வசதிகளிற் சில :

● தாராளமான பெரிய அறைகள்
● மின்விசிறிகள் ● றேடியோ சங்கீத உபகரணங்கள்
● சுகதளபாடங்கள்
அறை ஒவ்வொன்றுடனும்
● ஸ்நான சுத்திகரத் தனிஅமைப்புகள்
● உணவுஅருந்த உல்காசமான திறந்த வெளிஇடம்
● மாடி நந்தவனம் ● பூந்தோட்டமுற்றம்
சிறு பிள்ளைகளுக்கு உகந்த
● விளையாட்டு அறைகள் ● சிறு மிருகசாலை
● மோட்டார்வாகனங்கட்கு 'கராஜ்'வசதி
உல்லாசப் பிரயாணிகளுக்கு உதவியான
● வழிகாட்டிகள் ● போக்குவரவு வசதிகள்
மேல்நாட்டு, கீழ்நாட்டு முறைகளில் தயாரிக்கப்படும்
● திறமையான உணவு

| | தனிஆள் | இருவர் | |
|---|---|---|---|
| 1-ம் வகுப்பு அறை | 10 ரூபா | 18 ரூபா | நாள் ஒன்றுக்கு |
| 2-ம் வகுப்பு அறை | 7 ரூபா 50 சதம் | 15 ரூபா | |

கிரமமாய் வருபவர்களுக்கும், வர்த்தக பிரயாணிகளுக்கும் விசேஷ சலுகைகள் காட்டப்படும்.

விவாகவரவேற்பு, பிரியாவிடை முதலிய வைபவங்களுக்கு உகந்த இடம் இது.

"பாம் கோட்" மண்டபம், வெளிமுற்றம் கொண்டாட்டங்களுக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

மறவாதீர்கள் :

விடுதி வசதிகளுக்கும், கொண்டாட்டங்களுக்கும்
யாழ்ப்பாணத்தில் கீர்த்திவாய்ந்த இடம்

"பாம் கோட்"

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க, 5-ம் குறுக்குத்தெருவில் வதியும் திரு நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1964-ம் ஆண்டு புரட்டாதிமாதம் 26-ந் திகதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org